## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 03.07.2016 | ஆண்டின் 14ம் ஞாயிறு - திருப்பலி | 02 |
| 06.07.2016 | தூய மரிய கொரற்றி - திருப்பலி | 03 |
| 10.07.2016 | ஆண்டின் 15ம் ஞாயிறு - திருப்பலி | 04 |
| 11.07.2016 | தூய பெனடிக்ட் திருவிழா - திருப்பலி | 05 |
| 15.07.2016 | அருளாளர் ஆன்மரி ஜவுஹே - திருப்பலி | 07 |
| 16.07.2016 | கார்மேல் அன்னை திருவிழா - திருப்பலி | 08 |
| 17.07.2016 | ஆண்டின் 16ம் ஞாயிறு - திருப்பலி | 09 |
| 22.07.2016 | மகதலா மரியா திருவிழா - திருப்பலி | 10 |
| 24.07.2016 | ஆண்டின் 17ம் ஞாயிறு - திருப்பலி | 12 |
| 25.07.2016 | தூய யாக்கோபு திருத்தூதர் திருவிழா - திருப்பலி | 13 |
| 26.07.2016 | தூய சுவக்கின் அன்னம்மாள் திருவிழா - திருப்பலி | 14 |
| 28.07.2016 | தூய அல்போன்சா திருவிழா - திருப்பலி | 15 |
| 29.07.2016 | தூய மார்த்தா நினைவு - திருப்பலி | 16 |
| 31.07.2016 | ஆண்டின் 18ம் ஞாயிறு - திருப்பலி | 16 |


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


| | | |
|---|---|---|
| 1. | முதியோருக்கு மதிப்பும் அன்பும் (சுவக்கீன் அன்னம்மாள் விழா) | 19 |
| 2. | அல்போன்சம்மாள் தரும் வாழ்வின் பாடங்கள் | 22 |
| 3. | கார்மேல் அன்னை வரலாற்று குறிப்பு | 24 |
| 4. | திருச்சபை செய்திகள் | 25 |

# பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

**03.07.2016 ஆண்டின் 14ம் ஞாயிறு திருப்பலி**

திரு. D.V.R. ராஜா

## முன்னுரை

தூய தோமா இயேசுவின் 12 சீடர்களில் ஒருவரும் திருத்தூதரும் ஆவார். நம் திருச்சபை இன்று இவரது திருவிழாவைக் கொண்டாடுகிறது. இவர் கி.பி. 52ல் இந்தியா வந்து பல மாநிலங்களுக்குச் சென்று இறையரசைப் பரவச்செய்து தமிழ்நாட்டில் சென்னையில் கொலையுண்டு இறந்தார். இவர் இந்தியாவின் பாதுகாவலர் ஆவார்.

இன்றைய வாசகங்கள் ஒருவரை ஒருவர் அன்பு செய்து வாழவும், தன்னை நேசிப்பதுபோல் பிறரையும் நேசிக்கவும் வேண்டும் என்ற முதல் கட்டளையை நினைவுறுத்தும் படியாக அமைந்துள்ளது. மேலும் ஊனியல்பின் இச்சைப்படி நடவாமல் ஆவியின் வழிநடத்துதலில் நடக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. இன்றைய நற்செய்தியில் இயேசு 72 சீடர்களை இருவர் இருவராக எல்லா ஊர்களுக்கும் இறையரசு நெருங்கி விட்டதை அறிவிக்க அனுப்புகிறார். அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு என ஆண்டவர் அறுவடைக்கு நம்மை அழைக்கின்றார்.

எனவே, கலப்பையில் கைவைத்தவன் திரும்பி பார்க்கக் கூடாது என்பதுபோல கிறிஸ்துவின் அடையாளம் தரித்த நாம், தேவரீர் வருமளவும் உமது மரணத்தை அறிக்கையிடவும், உமது உயிர்ப்பை எடுத்துரைக்கிறோம் என்ற வார்த்தையை மெய்ப்பிக்கும் வண்ணமாய் இறையரசை எடுத்தியம்ப தூய தோமா வழியாய் இறையருள் வேண்டுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. திருச்சபைக்காக: திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், துறவறத்தார் இறையரசின் மேன்மையை உலகின் கடை எல்லையிலுள்ள மக்கள் அனைவரும் அறியவும், பெயரளவு கிறிஸ்தவர்களாக உள்ள மக்களும் இறையரசின் பணிகளுக்கு தங்களால் இயன்ற பங்களிப்பை நல்கிடவும், புதிய திட்டங்களையும் செயல் வடிவத்தையும் தந்து, மக்களைப் பண்படுத்த தேவையான ஆன்ம உடல் நலத்தையும் இறைப்பற்றையும் தந்திட வேண்டுமென்று தூய தோமா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. பங்கு மக்களுக்காக: பங்கு மக்கள் தவறாது ஆலய வழிபாடுகளில் பங்கெடுக்கவும் தங்கள் பிள்ளைகளான இளைய சமுதாயத்தினரை பக்தியில் சிறுவயது முதலே வளர்க்கவும் நோய், ஏமாற்றம், நஷ்டம், ஆபத்து இவைகளினின்று பாதுகாத்து குடும்பங்களின் தேவைகளை நிறைவேற்றிடவும் தூய தோமா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. நோயுற்றோருக்காக: மருத்துவருக்கெல்லாம் மருத்துவரான இறைவா, உலகில் பல்வேறு நோய்களாலும், பெயர் தெரியாத புதிய வியாதிகளினாலும் துன்புறும் மக்களையும் மரணப்படுக்கையில் உள்ளவர்களையும் உமது விலாவிலிருந்து பெருக்கெடுத்த நீரையும் குருதியையும் அவர்கள்மேல் பொழிந்து குணப்படுத்துமாறு தூய தோமா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

4. இளைஞர் இளம்பெண்களுக்காக: எம் பங்கிலுள்ள இளைஞர் இளம்பெண்கள் இறையருளால் தாங்கள் கற்கும் கல்வியில் திறமையானவர்களாகவும், பெற்றோருக்கும் சமுதாயத்திற்கும் தங்கள் பங்களிப்பை முழுமையாக நல்கிடவும், நன்றியுணர்வோடு இறைப்பணியில் தங்களால் இயன்றவரை செயலாற்றிடவும் தேவையான ஞானத்தையும் இறையாசீரையும் பொழிந்தருள வேண்டி தூய தோமா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 06.07.2016 தூய மரிய கொரற்றி திருப்பலி

திருமதி. ஆனிரெக்ஸ்

### முன்னுரை

இறையேசுவில் அன்பு மக்களே, இன்று நம் தாய் திருச்சபை தூய மரியகொரற்றி என்னும் புனித கன்னிகையை நினைவுகூர்ந்து அவளின் வாழ்வை நாம் பிரதிபலிக்க நம்மை அழைக்கிறது. முதலாவது தூய மரிய கொரற்றி தனது கன்னிமையை பரிசுத்தமாய் காக்கும்படி தேவதாயிடம் தன்னையே அர்ப்பணித்திருந்தாள். இரண்டாவதாக கடவுள் விரும்பாததை அவள் செய்ய துணியவில்லை. கடவுள் விரும்பாததை செய்யக்கூடாது என்பதற்காக உயிரை இழக்கும்வரை போராடினாள். என் அன்பு சகோதரிகளே, நாம் நமது ஆன்மாவிலும், உடலிலும் நமது தூய்மையைக் காத்துக்கொள்ள இறைவிடம் செபிக்கிறோமா? நமது நடை, உடை, பாவனை, நமது சுயமரியாதையை காத்து மேம்படுத்தும் விதமாய் உள்ளதா? அதை நமது பெண் பிள்ளைகளுக்கு பயிற்றுவிக்கிறோமா? பெண்களின் சுயமரியாதையை எல்லாவிதத்திலும் மதிக்க நமது ஆண் பிள்ளைகளுக்கு கற்றுத்தருகிறோமா? இந்தக் கேள்விகளை நமக்கு நாமே கேட்டு சீர்பெற்று பிள்ளைகளையும் சீர்ப்படுத்தினால்தான் இப்புனிதையின் திருவிழாவைக் கொண்டாடுவது அர்த்தமுள்ளதாயிருக்கும். இதை உணர்ந்தவர்களாய் இத்திருப்பலியில் இணைவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. சேனைகளின் ஆண்டவரே எம் இறைவா, உமது சேனையான கத்தோலிக்கத் திருச்சபையை வழிநடத்தும் குருத்துவத் தலைவர்கள், இருபால் துறவறத்தார் தங்கள் தூய்மையில் உறுதியாய் நிலைத்து வாழ்ந்து கத்தோலிக்க விசுவாசிகளையும் அவ்வாறே பயிற்றுவிக்க

அவர்களுக்குத் தேவையான வரங்களை தூய மரிய கொரற்றியின் வழியாய் உம்மை மன்றாடுகிறோம்.

2. "இருமனம் கொண்ட மக்களாகிய அவர்கள் தங்கள் குற்றத்திற்காகத் தண்டனை பெறுவார்கள்" என்று ஓசேயின் வழியாய் எச்சரித்த அன்பு ஆண்டவரே, நாங்கள் உம்மோடு ஒருமனதாய் முழுமனதுடன் உமக்கு விருப்பமான விசுவாசத்துடன் திருமண பந்தத்திலும் பிரமாணிக்கமான தூய்மையுடன் வாழ எங்களுக்கு வரமருள தூய மரிய கொரற்றியின் வழியாய் உம்மை மன்றாடுகிறோம்.

3. பாவத்தில் விழச்செய்யும் உலகுக்கும் அதற்கு காரணமாய் இருப்போருக்கும் கேடு என்று கூறிய இயேசுவே "விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது" (மத் 18:7) என்று நாங்கள் உணர்ந்து கொள்ளவும், பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாகும் சிறுவர் சிறுமியரின் உடலிலும், உள்ளத்திலும் ஏற்படும் காயங்கள் தூய மரிய கொரற்றியின் பரிந்துரையால் குணமடைந்து இறையாசீரால் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 10.07.2016 ஆண்டின் 15ம் ஞாயிறு திருப்பலி

திருமதி. டிலைலா சேவியா

### முன்னுரை

"நற்செயல்கள் நல்ல வார்த்தைகளைவிட சிறந்தவை, மேலானவை"
- பிரான்சிஸ் அசிசி

இன்றைய உலகில் ஜாதி, மதம், சட்டம், சம்பிரதாயம் இவற்றின் பெயரால் தீமையும் அநீதியும் கொடிக்கட்டிப் பறக்கின்றன. நன்மைச் செய்ய வாய்ப்பிருந்தும் அதை மறந்து, நான், எனது, என்னுடையது என்றத் தாரக மந்திரத்தைச் சுகமாகச் சுவாசித்துக் கொண்டிருக்கும் நம்மிடையே கடந்த சில நாட்களாக, மாதங்களாக இரக்கம் பற்றியப் பேச்சு, இரக்கத்தை வெளிப்படுத்தும் வார்த்தைகள், சுவர்படங்கள், விளக்கவுரைகள் அதிகம் காணப்படுகின்றன. இவைகளைத்தான் இயேசு தான் வாழ்ந்தக் காலங்களில் இறைவாக்காக உவமைகளில் கூறிவந்தார். இன்றும் நமக்கு இன்றைய வாசகங்களில் "அடுத்தவருக்கு இரங்க வேண்டும்" என்ற செய்தியின் வழியாக நம்மை நன்மைச் செய்யத் தூண்டுகிறார்.

நாம் ஒவ்வொருவரும் கடவுளை மட்டுமல்லாது நம்மோடு வாழும் மனிதர்களையும், அடுத்திருப்பவர்களையும் அன்பு செய்தும், இரக்கம் காட்டியும் வாழ நம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். அன்பெனும் ஆலமரமாய் நாம் வளர்ந்து, அதன் நிழலிலே எல்லா உயிர்களையும் இளைப்பாறச் செய்வதே உண்மையான இரக்கச் செயல். இந்தக்

கருத்துக்களை மனதில் கொண்டு இன்றைய திருப்பலியில் சிறப்பாக மனதூன்றி செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு தந்தையே, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரும் என்றும் உமது வார்த்தைகளையும், நெறிமுறைகளைப் பின்பற்றி தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட திருச்சபையை தங்களின் நல்ல முன்மாதிரி வழியாக பிறருக்கும் இறைவனுக்கும் சாட்சிய வாழ்வுக்கு இட்டுச்செல்லும் வரம் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நல்லாயனாம் இறைவா, மேய்ப்பன் தன் ஆடுகளை தீமைகளிலிருந்தும் ஆபத்துக்களிலிருந்தும் பாதுகாப்பதுப்போல இன்றைய சூழ்நிலையில் தேவையற்ற அழிவிற்கும், துன்பத்திற்கும் இட்டுச் செல்லும் பாதையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் இளம் உள்ளங்களை அவர்களை ஈர்க்கும் தீய பாதையினின்று உமது கோலும் கழியும் நல்ல பாதைக்கு வழிகாட்ட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வல்லமையால் சுகமளிக்கும் இறைவா, பலவிதமான நோய்கள், தீராத வியாதிகள் தொற்று நோய்கள் போன்றவைகளால் மனம் தளர்ந்து வேதனையில் வாழும் மக்களை உமது வல்லமையால் குணப்படுத்தவும் இவர்கள்மீது உமது பேரிரக்கத்தை அருளும்படியும் உம்மை மன்றாடுகிறோம்.

4. ஆற்றலும், அன்பும் நிறைந்த இறைவா, இன்றைய நாட்களில் உலகில் நடந்துக்கொண்டிருக்கும்போர்,வன்முறை,அநீதிகள்,பகைமையுணர்வு, பழிவாங்கும் உணர்வு போன்றவைகளை உமது ஆற்றலால் அழித்து வீடு, சமுதாயம், நாடு மற்றும் தனிமனிதனின் உள்ளங்களில் உமது அன்பு வந்து தங்கி அழிவை விடுத்து ஆக்கப்பணியில் சிறந்து விளங்க வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

அன்பாய் இருப்போம், அன்பையே விதைப்போம், அன்பான சமுதாயத்தை அறுவடை செய்வோம்.

## 11.07.2016 தூய பெனடிக்ட் திருப்பலி

திருமதி. ராணி வில்சன்

**முன்னுரை**

இறைவார்த்தையே வாழ்வு, வாழ்வே இறைவார்த்தை என வாழ்ந்தவர்கள் சிலரே. இந்த வரிசையில் வாழ்ந்தவர் புனித பெனடிக்ட்.

2தெச.3:7-12ல் சோம்பித்திரியாமல், பிறருக்கு சுமையாக இல்லாமல் துன்பம் விளைவிக்காமல், உழைத்து தான் உண்ணவும், பிறர் அதுபோல் வாழவும் அறிவுறுத்துகிறது இவ்வார்த்தைகள். இன்றைய வாசகமும், நற்செய்தியும் நமக்குத் தருவது இதுவே. வீணான சடங்குகள், வெளிவேடங்களின்றி, சிறிய செயலானாலும் அது பயனுள்ள செயலாக மாறவேண்டும். இப்படி வாழ்ந்தவர் இப்புனிதர். புனித ஸ்கொலாஸ்திகாவின் சகோதரர் இவர். உயர்ந்த குலத்தில் தோன்றியதால் புகழ்பெற்ற உரோமைக்கு கல்வி கற்க பெற்றோரால் அனுப்பப்பட்டார். அங்கு இளைஞர் மத்தியில் இருந்த தீச்செயல்கள் இவரை பதைபதைக்கச் செய்து, உரோமை விட்டு வெளியேறினார். மறைநூலில் பாவச் செயலைக் கண்டால் பாம்பைக் கண்டதுபோல எனும் இவரது முயற்சி எல்லோருக்கும் நல்ல பாடம். இறைவனுக்கு தன்னை அர்ப்பணிக்க திட்டமிட்டு மலை உச்சிக்குச் சென்று எர்மானூரசு என்ற தவமுனிவரை சந்தித்து அவர் காட்டிய வழியில் தவவாழ்க்கை மேற்கொண்டு மக்கள் பலரை தன்பால் ஈர்த்தவர். இதன் விளைவாக தோன்றியதே "பெனடிக்ட் துறவற சபை"

கி.பி. 1964ல் திருத்தந்தை 6ம் சின்னப்பர் இவரை ஐரோப்பிய நாடுகளின் சிறப்பு பாதுகாவலர் என அறிவித்தார். இவர் எழுதிய துறவற வாழ்வின் ஒழுங்குநூல் உறுதுணையாக இருந்ததுபோல வேறு எந்த நூ லும் அந்நாளில் அமையவில்லை. அதனால் 12ம் பத்திநாதர் இவருக்கு ஐரோப்பாவின் தந்தை என்ற பட்டம் சூட்டினார். தனிமையை நாடினாலும் அடிக்கடி மக்களைச் சந்தித்தார். தனது இறப்பை முன்னறிவித்தார். திருவுணவு பெற்று தனது கைகளை உயர்த்தி செபித்துக் கொண்டிருக்கும் போதே உயிர் பிரிந்தது. இவரைப்போன்று செபத்திலும் பக்தியிலும் சிறந்து வாழ இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, அனைத்திலும் ஞானத்தோடு நடந்துக்கொள்ளவும், கிறிஸ்துவோடு மாறாத நட்பும் எவராலும் பிரிக்கமுடியாத அன்பும், கூட்டு வாழ்வும் வாழ அழைக்கப்பட்ட எம் ஞான மேய்ப்பர்கள் அவ்வாறு வாழவும், பிறரையும் வாழ தூண்டவும் வேண்டிய அருளைத் தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. வாழும் வழிகளை எமக்குத் தந்த இறைவா, திருஅவையின் உண்மையான கட்டளைகள் என்ன என்பதை உணர்ந்து அதை சிரமேற்கொண்டு வாழ்ந்து எமது வாழ்வால் பிறரையும் ஈர்க்கும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. புனிதமே இறைவா, இன்று நினைவுகூறும் புனிதரைப்போல இறை மக்களாகிய நாங்கள் வாழவும், எங்கள் பிள்ளைகளும், தலைமுறைகளும் பின்பற்றி வாழவும் வேண்டுகிறோம். இப்புனிதரைப்போல மற்ற

அனைத்து புனிதர்கள் வாழ்வையும் நாங்கள் தினம் தினம் எங்கள் வாழ்வில் நினைத்துப் பார்த்து, தியானித்து அதன்படி வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 15.07.2016 அருளாளர் ஆன்மரி ஜவுஹே திருப்பலி

திருமதி. டிலைலா சேவியர்

### முன்னுரை

"இறை இரக்கத்தை தங்களின் பணியாக வாழ்வில் கடைப்பிடித்தவர்கள் புனிதர்கள்"

அருளாளர் ஆன்மரி ஜவுஹே 1779ம் ஆண்டு நவம்பர் 10ம் நாள் ஜலான்ஜெஸ் என்னும் பிரிவினைச் சேர்ந்த வசதியான குடும்பத்தில் பத்து குழந்தைகளில் ஐந்தாவது குழந்தையாக பல்த்தசார் கிளாடின் ஜவுஹே தம்பதியருக்கு பிறந்தார். இவரின் குடும்ப வழக்கத்தின்படி திராட்சை ரசம் பருகும் வழக்கம் உள்ளபடியால் இவர் ஒருமுறை (றநைெ) குடிக்க முற்படும்போது இவரின் ஊழியர் அதை தடுத்து நிறுத்தி இனிமேல் திராட்சை இரசத்தைப் பருக வேண்டாமென்று கூறினார். அதுமுதல் ஆன்மரி அந்தப் பழக்கத்தை விட்டுவிட்டார். இவர் தன்னுடைய வாலிப வயதின் முழுவதிலும் அன்றைய கால கட்டத்தில் நடந்துக்கொண்டிருந்த பிரஞ்சு புரட்சியின்போது, குருக்களுக்கும், குருக்கள் திருப்பலி நடத்துவதற்கும் மறைமுகமாக பல விதங்களில் உதவி செய்தார். அது மட்டுமல்லாமல் தான் துறவற சபையில் சேரவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தும், துறவற சபைகளும் கத்தோலிக்க ஆலயங்களும் மூடப்பட்டிருந்ததால், தனக்குத்தானே 19ம் வயதில் துறவற வார்த்தைப்பாட்டை எடுத்துக்கொண்டார்.

பின்பு பெஸான்கான் என்னுமிடத்திலுள்ள கருணை இல்லம் நடத்தும் சகோதரிகளுடன் சேர்ந்து துறவற வாழ்க்கையை மேற்கொண்டார். அப்போது பல முறை புனித அவிலா தெரசா தனக்குத்தோன்றி, பலதரப்பட்ட சிறுவர்களை பாதுகாக்கும்படி சொல்வதாக உணர்ந்தார். பிற்காலத்தில் இதன் அர்த்தம் புரிந்ததால் தன் வாழ்நாளெல்லாம் சாதி, மத, இன வேறுபாடின்றி மக்களை பாதுகாப்பதில் தன் வாழ்நாளை செலவழித்து, "அன்புத்தாய்" என்ற பெயரையும் பெற்றார்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. 1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தையின் தூய திட்டங்கள், திருச்சபை செழித்தோங்க அவர் எடுக்கும் முயற்சிகள், திருத்தந்தையின் செபங்கள், அனைத்தையும் நீர் ஏற்று அவரோடு சேர்ந்து உழைக்கும் பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரையும் நிறைவாய் ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. 2. அன்பே உருவான இறைவா, சமுதாயத்தில் சாதி, மத, இன வேறுபாடுகளால் ஒதுக்கப்பட்டவர்களை நல்ல உள்ளம் கொண்டவர்கள் தயக்கமின்றி அருளாளர் ஆன்மரிபோல உதவிபுரிந்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் உன்னதப் பணியை செய்யும் நல்ல மனதைரியத்தை தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தூய்மையே உருவான இறைவா, உமது பணியைத் தொடர்ந்து செய்கின்ற குருக்கள், கன்னியர்கள், அருட்சகோதர சகோதரிகள் இருபால் துறவறத்தார் இன்றைய சூழ்நிலையில் தங்களுக்கு ஏற்படும் இன்னல்களையும், துன்பங்களையும் இயேசுவுக்காக தாங்கி, இயேசுவின் துணையோடு இறுதிவரை புனித சேவை செய்யும் வரம் தந்திட உம்மை மன்றாடுகிறோம்.

4. வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, இன்றைய காலகட்டத்தில் பல்வேறு பிரச்சனைகளாலும், எதிர்ப்பார்ப்புகளாலும், ஏமாற்றங்கள், சோதனைகள், வேதனைகள் போன்றவைகளாலும் துன்புறும் இளைஞர்கள், இளம் பெண்களை உமது அன்பின் பராமரிப்பில் பாதுகாத்து, இவர்களுக்கு நல்ல எதிர்காலத்தையும் நல்ல வேலைவாய்ப்பையும் பெற்றுத்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 16.07.2016 கார்மேல் அன்னை திருவிழா திருப்பலி

திரு. ஜான் சுரேஷ்

### முன்னுரை

இறை இயேசுவின் அன்பு சகோதர சகோதரிகளே, இன்று நம் தாய் திருச்சபையானது தூய கார்மேல் அன்னையின் திருநாளைக்கொண்டாட அழைப்பு விடுக்கிறது. கார்மேல் சபையின் தலைமை தந்தையாக இருந்த தூய சைமன் ஸ்டோக் என்பவருக்கு அன்னை மரியாள் 1251ம் ஆண்டு ஜீலை 16 அன்று தோன்றி அவரிடம் உத்திரியம் ஒன்றைக் கொடுத்து, "இதை பக்தியோடு அணிபவர்கள் இம்மையிலும், மறுமையிலும் எவ்வித துன்பத்திலும் நரக நெருப்பிலும் அல்லல்பட மாட்டார்கள்" என்றார். நம் பலவீனங்களை அறிந்த அன்னை நம்மை மீட்க, கேடயமாக விளங்கும் உத்திரியத்தை தந்தருளினார். இந்த பரிவுள்ள அன்னையின் அருளைப்பெற்று இம்மையிலும் மறுமையிலும் அவர் துணையோடு வாழ்ந்திட இத்திருப்பலியில் தொடர்ந்து மன்றாடுவோம், இறையாசீர் பெறுவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. அன்பு தந்தையே இறைவா, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவருக்காகவும்

வேண்டுகிறோம். அவர்களுக்குத் தேவையான அனைத்து அருளைத் தந்தருள வேண்டுமென்று கார்மேல் அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கமே உருவான இறைவா, தீராத வியாதிகளாலும் மன உளைச்சலாலும் அவதிப்படுகின்றவர்கள் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்களுக்கு நீரே நல்ல மருத்துவராகவும், ஆலோசகராகவும் இருந்து முழுமையான சுகத்தை அளிக்க வேண்டுமென்று கார்மேல் அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. உறவின் பாலமே இறைவா, எங்களின் பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்ந்து இறையாட்சியை எங்கும் மலரச் செய்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கார்மேல் அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

4. ஞானத்தின் இருப்பிடமே இறைவா, கல்வி பயிலும் அனைத்து மாணவ மாணவிகளையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களுக்கு நல்ல கல்வி ஞானத்தை வழங்கி சமுதாயத்திற்கும் திருச்சபைக்கும் ஏற்ற பிள்ளைகளாக இவர்கள் வளர வேண்டுமென்று கார்மேல் அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 17.07.2016 ஆண்டின் 16ம் ஞாயிறு திருப்பலி

திருமதி ராணி வில்சன்

**முன்னுரை**

இறைவனது இரக்கச் செயல்கள் புரிந்தும் புரியாததுமானதாக இருந்தது. அதனால்தான் பழைய ஏற்பாட்டில் அதை அனுபவித்தும் சாரா உணர இயலாமல் இருந்தார். இதைத்தான் பவுலடிகளார் சொல்கிறார். மறைந்திருந்த இத்திட்டம் அதாவது இரக்கச் செயல்கள் இப்போது எங்கள் வழியாக அறிவிக்கவும் அது மிகுந்த மாட்சிமையோடு செயலாற்றுகிறது எனவும் பறைசாற்ற இறைவன் திருவுளம் கொண்டார் என்பதை தெரிவிக்கிறார். அதுமட்டுமல்ல தான் ஏற்றுக்கொண்ட இப்பொறுப்பினால் வேதனையுற்றாலும் மகிழ்கிறேன் என்கிறார். அதுவும் இறை இயேசுவின் வேதனை என்கிறார். என்ன தியாகம்.

ஆபிரகாம் எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் வந்தவர்களை உபசரிக்கிறார். அதையேதான் மார்த்தா இறை இயேசுவுக்கும் அவரோடு வந்தவர்களுக்கும் செய்கிறார். உதவி செய்ய மரியாவை

அழைக்கிறார். செபமா? செயலா? என்றால் இரண்டுமே மிக அவசியமானது என்பதைத்தான் இவ்வார்த்தைகள் நமக்கு அறிவுறுத்துகிறது. நாம் பிரதிபலன் எதிர்பார்க்காமல் உபசரிக்கிறோமா? உதவுகிறோமா? இரக்கச் செயல்கள் அனைத்தும் இறைவனிடமிருந்துதான் வருகின்றன என்பதை உணர்ந்துள்ளோமா? மேலோட்டமான சிந்தனையோ, செயலோ இல்லாமல் உயிரோட்டமானதாக நமது ஒவ்வொரு செயலும் விசுவாசமும் அமைய இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, வாழ்வது நான் அல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார் என உறுதியோடு புனித பவுலடிகளார் அறிவிக்கிறார். அதுபோல மக்களை வழிநடத்தும் எங்கள் திருஅவையின் பணியாளர்கள் அனைவரையும் உம் கரத்தில் தாங்கி வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இறைவா, குடும்பத்தில் உள்ள அனைவரும் எந்த பிரதிபலனும் எதிர்பார்க்காமல் ஒருவருக்கொருவர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடும் பாசத்தோடும் அணுகி உபசரித்து உதவிசெய்து வாழ வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கம் நிறைந்த இறைவா, பங்கு மக்கள், அதைச்சார்ந்த பக்த சபைகள், இயக்கங்கள் அனைத்தும் ஒற்றுமை, சமாதானம், அன்பு இவற்றை இதயத்தில் ஏந்தி தேவையில் உள்ளோர், உதவி தேவைப்படுவோர் இவர்களுக்கு இரக்கச் செயல்களைச் செய்து இறைவனது மாட்சிமையை இவ்வுலகிற்கு அறிவிக்க வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. மன்னிக்கும் இறைவா, பகைவனையும் மன்னிக்கச் சொன்னீர் ஆனால் எங்களால் இயலவில்லை. இதுவும் ஓர் இரக்கச் செயல் என்பதை நாங்கள் உணர்கின்றோம். இதை செயல்படுத்த வேண்டிய ஆற்றல், வல்லமை, மன உறுதியை எங்கள் அனைவருக்கும் தர வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 22.07.2016 மகதலா மரியா திருவிழா திருப்பலி

திருமதி டிலைலா சேவியர்

## முன்னுரை

கிறிஸ்துவில் பிரியமானவர்களே, இயேசுவைத் தேடிச் சென்று பற்றிக் கொண்ட மகதலா மரியாளின் திருநாளை திருச்சபை இன்று சிறப்பிக்கின்றது. எப்படிப்பட்ட தீமையில் மூழ்கியிருந்தாலும், முழுமையான

விடுதலைக் கொடுப்பவர் நம் அன்பர் இயேசு என்பதை தன் வாழ்வில் சுவைத்துப் பார்த்தவர் தான் மகதலா மரியா. தான் மட்டும் சுவைக்காமல் அதனை மற்றவரும் சுவைக்க வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையில் தான் இயேசுவைப்பற்றி அவர் உயிருடன் இருந்தபோதும், மரித்து உயிர்த்தெழுந்த போதும் மற்றவருக்கு நற்செய்தியாய் அறிவித்தார். இயேசு தேர்ந்தெடுத்த 12 அப்போஸ்தலர்கள் அவரோடு இருந்ததுபோல பல பெண் சீடர்களும் இருந்தனர். அதில் அதிதீவிரமாய் தன் உடமைகளையெல்லாம் வைத்து இயேசுவுக்கு உதவியவர்களில் சிறப்பான இடம் பெறுபவர் மகதலா மரியா. எனவேதான் திருச்சபை அவரை இன்று நினைவு கூறுகிறது.

பெண்களை முன்னிலைப்படுத்தாத அந்த கால கட்டத்திலும் துணிச்சலோடு வந்து சேவை செய்த பெண்களில் ஒருவராக மகதலா மரியா திகழ்ந்தார். இவருக்கு இவ்வளவு துணிச்சலும், தைரியமும், மனத்திடனும் கிடைக்க காரணம் அவர் அருகில் என்றும் இருந்த அன்பர் இயேசுதான். எனவே இயேசு நம்மோடு இருப்பதை நாம் உறுதியாய் நம்பினால் மட்டுமே நாமும் துணிச்சல் உள்ளவர்களாய் தினமும் நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை, எதிர்ப்புகளை, தோல்விகளை எதிர்கொண்டு வெற்றிநடை போட முடியும். இதுநாள்வரை இந்த உறுதியான உள்ளத்தோடு இல்லாமல் கோழைகளாய் வாழ்ந்ததற்கு இத்திருப்பலியில் இறைவனிடம் மன்னிப்பு கேட்டு மகதலா போன்று வீரமுள்ள சீடராக இருந்து வாழ்க்கையை எதிர்க்கொள்ளும் வரம் வேண்டி பக்தியோடு செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. இறை இரக்கத்தின் முகமான இயேசுவே, எங்கள் இயலாமையிலும் எங்களுக்காக தந்தையிடம் பரிந்து பேசுபவரே, உலகில் வாழும் எல்லா குடும்பங்களுக்காகவும் உம்மிடம் மன்றாடுகிறோம். ஒவ்வொரு குடும்பமும் உமது இரக்கத்தின் நிழலில் வளர்வதை உணர்ந்து பிறருக்கு முன்மாதிரியாயும், வாழும் இடத்தில் சூழ்ந்துள்ளவர்களோடு உமது அன்பை வெளிப்படுத்தும் கருவியாய் வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. தந்தையிடம் என்றும் பரிந்து பேசும் இயேசுவே, எங்கள் பங்கில் உள்ள எல்லாச் சிறுவர் சிறுமிகள் மற்றும் இளைஞர்களை தயவாய் கண்ணோக்கும். பல திறமைகளை கொடுத்து உம்மை மகிமைப்படுத்த இந்த மண்ணுக்கு நீர் அனுப்பியிருப்பதை பெற்றோர்கள் உணர்ந்து தங்கள் பிள்ளைகள் உம்மை அடையும் வழிமுறைகளை தங்கள் வாழ்வின் மூலம் கற்றுத்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. ஏழுவித பேய்களை உமது சீடரான மகதலா மரியாவிடமிருந்து ஓட்டிய இரக்கமும் அன்பும் கொண்ட இயேசுவே, எங்கள் வாழ்வில் நாங்கள் அறிந்தும் அறியாமலும் செய்கின்ற உமக்கெதிரான

செயல்களுக்காக உம்மிடம் மன்னிப்பு கேட்கிறோம். நாங்களும் மகதலா மரியாளைப்போல் உம்மைப் பற்றிக்கொண்டு வாழ எங்களிடமுள்ள பயம், சோம்பேறித்தனம், விசுவாசமின்மை, கோபம், பேராசை போன்ற அழிவுக்கு இட்டுச்செல்லும் பேய்களை விரட்ட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 24.07.2016 ஆண்டின் 17ம் ஞாயிறு திருப்பலி

திருமதி. ராணி சம்பந்தன்

### முன்னுரை

கிறிஸ்துவில் வாழும் அன்பு நெஞ்சங்களே, இயேசு கிறிஸ்துவின் அன்பில் நிறைந்திருக்கும் நமக்கு இறைவன் கொடுக்க கூடியவராகவும், திறக்க கூடியவராகவும், கடவுளை கண்டடைய நம்மை அனுமதிப்பவராகவும் திகழ்கின்றார். லூக்கா நற்செய்தியாளர், தம் நற்செய்தியில் "நீங்கள் அவருடைய ஆட்சியை நாடுங்கள்" அப்போது இவை உங்களுக்கு கொடுக்கப்படும். உங்கள் தந்தை உங்களை தம் ஆட்சிக்குட்படுத்த திருவுளம் கொண்டுள்ளார்" என்று கூறுகிறார்.

இன்றைய நற்செய்தி வாசகங்களும் இதையே தெளிவுப்படுத்துகின்றன. 10 நீதிமான்கள் நிறைந்த நகரத்தில் ஆயிரம் பாவிகள் வாழ்ந்தாலும் அந்நகரத்தை நான் அழிக்க மாட்டேன் என்று ஆண்டவர் ஆபிரகாமிடம் கூறுகிறார். நம் தந்தையிடம் நாம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதத்தால், நம்மால் உருவாக்கப்பட்ட பாவக்கடன் பத்திரங்களையெல்லாம் நமதாண்டவர் இயேசு சிலுவையில் வைத்து ஆணியடித்து அறவே ஒழித்துவிட்டார். தீயோர்களாகிய நாமே நம் பிள்ளைகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று நினைக்கும்போது நமது விண்ணக தந்தை நம்மை எவ்வாறு வழிநடத்துவார், கேட்டதை கொடுப்பார், தட்டினால் திறப்பார். தேடினால் கண்டடைய செய்வார் என்று சிந்தித்து, விசுவாசத்துடன் இத்திருப்பலியில் இணைவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. அன்பான எம் இறைவா, திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரையும் குறிப்பாக நம் திருத்தந்தையின் பல நல்ல திட்டங்களுக்கும், கருத்துக்களுக்கும் மதிப்புக் கொடுத்து ஒற்றுமையுடன் செயல்பட்டு இறையாட்சி மலர இயேசுவின் திரு ஆட்சி உலகெங்கும் பரவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆறுதலான எம் இறைவா, ஆங்காங்கே நடக்கும் சிறுசிறு விபத்துக்களில் உற்றாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு நீர்தாமே ஆறுதலையும் தேறுதலையும் தந்து இழப்பை ஈடுசெய்யக் கூடிய பல நலன்கள் தந்து தேற்றிட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாக்கும் இறைவா, பரந்து விரிந்து இருக்கும் இப்பூவுலகில் பயிர் செய்யும் நல்ல நிலங்களைகூட வீடுகட்டும் மனைகளாக உருவாக்கிக் கொண்டிருக்கும் நிலையில் விவசாயத்தை அழித்து உணவு பற்றாக்குறை, விலையேற்றம், ஏற்பட்டு ஏழை மக்கள் வேதனைப்படும் நிலையை மாற்ற வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. மன்னிக்கும் இறைவா, ஒப்புரவு என்னும் அருட்சாதனத்தை மறந்துவரும் இந்நாட்களில் உமது ஞானஒளியால் அனைவர் மனதிலும் மன்னிப்புக் கேட்டாத்தால்தான் மன்னிப்பு அடைய முடியும் என்ற எண்ணம் ஏற்பட உம்மை மன்றாடுகிறோம்.

## 25.07.2016 தூய யாக்கோபு திருத்தூதர் திருவிழா திருப்பலி

திரு. இம்மானுவேல் ஜெயராஜ்

### முன்னுரை

செபதேயுவின் மக்கள் யாக்கோபும், யோவானும் இயேசு அரியணையில் அமரும்போது அவருக்கு வலப்புறம் ஒருவரும் இடப்புறம் மற்றவரும் அமர தங்களுக்கு இரங்கும் என்று வேண்டினர். இவர்கள் இயேசுவின் சீடர்களாகவும், சகோதரர்களாகவும் வாழ்ந்ததாக மரபு கூறுகின்றது. யாக்கோபு எருசலேம் திருச்சபையின் தலைவராக இருந்தவர். புனித பவுல் புனித யாக்கோபுவை திருச்சபையின் தூண் என்று குறிப்பிடுகின்றார். புனித யாக்கோபு உலகெங்கும் சிதறி வாழும் இஸ்ரயேலின் பன்னிரு குலத்தினருக்காக திருமுகம் எழுதியுள்ளார். ஐந்தே அதிகாரம் கொண்ட சிறிய திருமுகமாயினும் சோதனைகள், இறைவார்த்தை, ஏழைகள், நம்பிக்கை, நற்செயல்கள், நாவடக்கம், மெய்ஞானம், உலகத்தோடு நட்பு, பிறரை குற்றப்படுத்துதல், செல்வம், போன்ற தலைப்புகளில் அரும்பெரும் கருத்துக்களை எடுத்துக்கூறி நம்மை இயேசுவின் மதிப்பீடுகளின்படி வாழ அழைக்கின்றார். அவரை நினைவுக்கூறும் இந்நாளில் நாமும் அவரைப்போல் இறை வார்த்தையை வாழ்வாக்க இத்திருப்பலியில் பக்தியுடன் செபித்து பங்குபெறுவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. அன்பின் ஆண்டவரே, எங்களுக்கு வரும் சோதனைகளை வெல்லவும், மனவுறுதியுடன் உம் மக்களாய் வாழும் ஞானத்தை எமக்குத்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆண்டவரே நாங்கள் இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்துவிடாமல் அதன்படி வாழ்ந்து உம் சித்தத்தை நிறைவேற்ற உம் துணை வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆண்டவரே உலகில் வாழும் ஏழை, எளியவர், ஆதரவற்றோர்,

அநாதைகள் இவர்கள்மேல் இரக்கம் கொண்டு எங்களிடமுள்ளதை இவர்களுக்கு பகிர்ந்தளித்து வாழும் நல் இதயம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. ஆண்டவரே நாங்கள் எங்கள் நாவால் பிறரை புண்படுத்தாமலும், பிறருக்கு துன்பம் விளைவிக்காமலும் உம் வார்த்தைகளை எடுத்துக்கூறவே அந்நாவை நாங்கள் பயன்படுத்தும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 26.07.2016 தூய சுவக்கின் அன்னம்மாள் திருவிழா திருப்பலி

திருமதி. பத்மாவதி

**முன்னுரை**

இன்று சுவக்கின் மற்றும் அன்னாள் இவர்களின் திருவிழாவை கொண்டாடுகிறோம். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தாயாகிய அன்னை மரியாளின் அன்பு பெற்றோர் என்பது நமது திருச்சபையின் மரபு. இதற்கு வரலாற்று ஆதாரங்கள் நமக்கு விவிலியத்தில் இல்லை. ஆனாலும் திருச்சபையால் ஏற்றுக் கொள்ளாத நூல்களான அன்னை மரியாவின் பிறப்பு நற்செய்தி மற்றும் மீட்பரின் குழந்தை பருவம் யாக்கோப்பின் நற்செய்தி ஆகிய நூல்களில் இவர்களைப் பற்றிய குறிப்புகள் காணக்கிடக்கின்றன.

நாசரேத்தில் வாழ்ந்த மிக செல்வ செழிப்பான குடும்பம் இவர்களது செல்வமும் சமூகமதிப்பும் இருந்தாலும் குழந்தை இல்லை. எனவே சமூகத்தில் இழிப்பார்வையால் உள்ளமுடைந்தோராய் அல்லலுற்று வருந்தினர். ஒரு திருவிழாவின்போது ஆண்டவருக்கு பலி செலுத்த சுவக்கின் கோவிலுக்குள் சென்றார். திடீரென ஒருவர் காட்சியில் தோன்றி குழந்தை இல்லாதவர் கடவுளுக்கு பலி செலுத்த தகுதியில்லை என கூறினார்.

தன் நிலையை நினைத்து அப்படியே குப்புற விழுந்து அழுதார். பின் வீட்டிற்குச் செல்ல மனமில்லாமல் காட்டுக்குச் சென்று தனிமையில் வாழ்ந்தார். கணவனை காணாது மனங்கலங்கிய அன்னா ஆண்டவரிடம் முறையிட்டு வேண்டினார். தனது மலட்டு நிலையை மாற்றி குழந்தை பாக்கியத்தை தரும்படிக்கும், பிறக்கும் குழந்தையை இறைப்பணிக்கு அர்ப்பணிப்பதாகவும் வேண்டினார், அவரது வேண்டுதல் கேட்கப்பட்டது. வானதூதர் அன்னாவுக்குத் தோன்றி அன்னா உன்னுடைய கண்ணீரை ஆண்டவர் கண்ணோக்கினார். நீ கருத்தாங்கி ஒரு குழந்தையை பெற்றெடுப்பாய். உமது வயிற்றிலுள்ள குழந்தை அனைத்து உலகத்தாலும் ஆசீர்வதிக்கப்பட்டதாய் இருக்கும் என்றார். இதே வாக்குறுதியை

சுவக்கினுக்கும் தூதர் கொடுத்தார், அதன்படியே குழந்தையும் பிறந்தது. அதற்கு மரியா என்னும் பெயர் இட்டார்கள்.

சுவக்கினும் அன்னாவும் அன்னை மரியாவை இறைவனுக்கு தாயாகும் தகுதியுள்ளவராக வளர்த்தார்கள். மேலும் இறைவனின் அழைப்புவரும்போது நம்பிக்கையுடன் ஏற்கும் பக்குவத்தையும் ஊற்றி வளர்த்தார்கள். மரியாளும் தான் பெற்ற வளர்ப்பு அனுபவத்தை தம்மகன் இயேசுவுக்கும் கொடுத்தார். அதன்படியே இறைவனின் திருவுளத்தை ஏற்று நடக்கவும் செய்தார். நாமும் நமது பிள்ளைகளை சுவக்கின் அன்னாபோல் கடவுளின் திருவுளத்திற்கு ஏற்றாற்போல் வளர்க்க இத்திருப்பலியில் இறைவனிடம் வேண்டுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருச்சபையின் தலைவராகிய இயேசுவே, திருச்சபையில் பணியாற்றும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவரையும் உமது மேய்ச்சலின் மக்களை உமது திருவுளத்தின்படி நேரிய வழியை காட்டி நடத்திட இறைவா அருள் புரியும்படி மன்றாடுகிறோம்.

2. நல்ல விதைகளையே இப்பூமியில் விதைக்க வந்த இறைமகனே, நாங்களும் உமது வார்த்தைகளை கேட்டு அதன்படி வாழ்ந்து பத்துக்கு நூறாக பலன்தந்திட எம்மை ஆசீர்வதிக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் தந்தையே, உம்மக்களாகிய நாங்களும் துன்பத்தில் துடிப்பவர்களுக்கு ஓடிச்சென்று உதவிடும் நல்ல மனதினை தந்தருளும்படி உம்மை மன்றாடுகிறோம்.

4. மன்னிக்கும் தந்தையே, உமது மக்களாகிய எங்களையும் உமக்கெதிராக நாங்கள் செய்த எல்லா குற்றங்களையும் குறைகளையும், பாவங்களையும் மன்னித்து மறந்து எம்மை உமது மக்களாக ஏற்றுக்கொள்ளும்படி உம்மை மன்றாடுகிறோம்.

**28.07.2016 தூய அல்போன்சா திருவிழா திருப்பலி**

திரு D.R.V ராஜா

**முன்னுரை**

அன்புக்குரியவர்களே, இன்று நாம் தூய அல்போன்சம்மாளின் விழாவினை கொண்டாடுகின்றோம். இப்புனிதை 1910ம் ஆண்டு ஆகஸ்ட் 19ம் நாள் கேரளாவில், கூடமல்லூரில் பிறந்தவர். சிறுவயதிலேயே பல நோய்களால் துன்பப்பட்டவர். இருந்தாலும் கடவுளின்மீது தான் வைத்திருந்த ஆழ்ந்த விசுவாசத்தில் ஒருபோதும் தளராமல் வாழ்ந்து வந்தார். 1928ல் துறவறத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

1946ல் ஜூலை 28ல் மறைந்த இவருக்கு, திருத்தந்தை 2ம் ஜான்பால் 1986ல் இந்தியா வந்தபோது, முத்திபேறு பெற்ற பட்டம் அளித்தார். தொடர்ந்து 2008ம் ஆண்டு இந்தியாவின் முதல் பெண் புனிதையாக மாறினார். முற்றிலும் இறைவனுக்கு உரியவராக வாழ்ந்த இப்புனிதையின் விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடும் நாமும் இறைவனின் பணியில் பிளவுபடா உள்ளத்துடன் ஈடுபட்டு வாழ தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. அன்பு இறைவா, வியப்புக்குரிய உமது வல்லமை தூய அல்போன்சாவில் விளங்குவதைக் கண்டு வியந்து உம்மைத் தாழ்மையுடன் வேண்டுகிறோம். அவரது சாட்சிய வாழ்வு உமக்கு உகந்ததாய் இருந்ததுபோல எங்கள் வாழ்வும் உமக்கு உகந்ததாய் இருக்க எங்களுக்கு தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்
2. மாசின்மையின் ஊற்றாகிய இறைவா, வானகக் கொடைகளில் பங்கு பெற்றதால் நாங்கள் புத்துயிர் பெற்றுள்ளோம் என்பதை உணர்ந்து, தூய அல்போன்சாவின் எடுத்துக்காட்டினைப் பின்பற்றி இயேசுவின் பாடுகளை எங்கள் உடலில் தாங்கிக் கொண்டு உம்மோடு ஒன்றித்து வாழ அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்
3. எங்கள் மீட்பராகிய இறைவா, கன்னியான தூய அல்போன்சாமீது விண்ணகக் கொடைகளை நிறைவாகப் பொழிந்தீரே. அப்புனிதையில் விளங்கிய நற்பண்புகளைக் கடைப்பிடித்து வாழ்ந்து அவரோடு நிலையான பேரின்பம் பெற்று மகிழ அனுபவிக்க அருள்தர வேண்டுமென்றும் உம்மை மன்றாடுகின்றோம்.
4. இரக்கம் நிறைந்த இறைவா, புனித அல்போன்சா என்னும் புனிதையின் விழாவினை கொண்டாடும் நாங்கள், எம் அன்றாட வாழ்வில் எங்களை சந்திக்க வரும் உம் திருமகனை ஆவலுடன் எதிர்பார்த்திருந்து அவருடைய வானக மணவிழாவில் கலந்துகொள்ள வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 29.07.2016 தூய மார்த்தா நினைவு திருப்பலி

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

## முன்னுரை

பிரியமான சகோதர சகோதரிகளே, தாயாம் திருச்சபை புனிதர்களை மகிமைப்படுத்துகிறது. ஏனெனில், புனிதர்கள் இயேசுவின் வார்த்தைகளை வாழ்வாக்கினார்கள். திருச்சபை இன்று புனித மார்த்தாவை நினைவுப்படுத்தி புனிதப்படுத்துகிறது. மார்த்தா இயேசுவின்மீது கொண்ட

ஆழ்ந்த பற்றுறுதி, நம்பிக்கை, இன்றைய நற்செய்தியில் வெளிப்படுகின்றது. இயேசுவை மார்த்தா முழுமையாக நம்பினார். எனவேதான், இயேசுவே மீட்பர், கடவுளின் மகன், உலகிற்கு வரவிருக்கும் மெசியா என்று அறிக்கையிடுகிறார். மார்த்தா மரியாவின் சகோதரன் லாசர் இயேசுவின்மீது அளவில்லா நம்பிக்கைக்கொண்டு வாழ்ந்தவர்.

நமது இறைநம்பிக்கை நம்பிக்கையோடு நின்றுவிடாமல் அவைகள் புது வாழ்விற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதையே மார்த்தா வழியாக, இயேசு நமக்கு உணர்த்துகிறார். நாமும் இயேசுவின்மீது கொண்ட ஆழ்ந்த பற்றுறுதி, நம்பிக்கை நம் வாழ்விலும் வெளிப்பட வேண்டும். கிறிஸ்து உயிர்க்கவில்லை என்றால் கிறிஸ்தவம் இல்லை. எனவே கிறிஸ்துவின் உயிர்ப்பை விசுவசிப்போம், அறிக்கையிடுவோம், விசுவாசத்தில் புனித மார்த்தாவைப்போல நாளும் வளர்வோம் என வாக்களித்துப் பக்தியோடு இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் நாயகனே இறைவா, இன்றைய உலகப்போக்கை உணர்ந்து இறையரசின் மேன்மை மேலும் வலுப்பெற திருச்சபையை அருளாட்சி செய்து வரும் எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால், ஆயர், குருக்கள், கன்னியர், துறவறத்தார், திருக்குடும்ப நிலையில் வாழ்வோர் அனைவரும் இயேசு எனும் பகலவனின் ஒளியில் நடப்பவர் இடறுவதில்லை எனும் நற்செய்தியை போதித்து, அனைவரும் இருளின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, முடிவில்லா பேரின்ப இறையரசுக்கு வந்து சேரத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உயிர்த்தெழுதலும் வாழ்வுமான இறைவா, உம்மிடம் நம்பிக்கைக்கொள்வோர் இறப்பினும் வாழ்வர். உயிரோடு இருக்கும்போது நாங்கள் உம்மீது நம்பிக்கைக்கொண்டு முடிவில்லாப் பேரின்ப வீட்டில் என்றென்றும் வாழத் தேவையான வரங்களை, இவ்வுலகில் தந்து, நோயிலிருந்தும், ஆபத்துக்களிலிருந்தும், விபத்துக்களிலிருந்தும் காப்பாற்றி முழுமையான வாழ்வளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆறுதல் அளிக்கும் அண்ணலே இறைவா, உலக நாடுகளில் உள்நாட்டுக்கலகம், தீவிரவாதம், வெளிநாட்டுப் படையெடுப்பு ஆகியவைகளால் மக்கள் பாதிக்கப்பட்டு, கொலை, கொள்ளையில் அகப்பட்டு, சமாதானத்தையும், சந்தோஷத்தையும் இழந்து அகதிகளாக அண்டை நாடுகளில் அடைக்கலம் தேடி அலையும் மக்கள் அனைவருக்கும் ஆறுதலும், தேறுதலுமாக இருந்து அவர்களுக்கு

அமைதியான வாழ்க்கையைத் தந்து ஆசீர்வதிக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

4. குணமளிக்கும் இறைவா, இன்றைய நாளில் சுகாதாரமற்ற சூழலினால் பசிப்பட்டினிகளால் பாதிக்கப்பட்டு இனம் காணமுடியாத நோய்களினால், மருத்துவ வசதியற்று, வேதனைப்படும் மக்களுக்கு நீர்தாமே வானக மருத்துவராக இருந்து குணமளித்துக் காக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

**31.07.2016 ஆண்டின் 18ம் ஞாயிறு திருப்பலி**

திரு. னு.ஏ.சு. ராஜா

**முன்னுரை**

பொதுக்காலம் ஆண்டின் 18ம் ஞாயிறு திருப்பலிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம். இம்மாதம் முழுவதும் இறைவன் செய்த நன்மைகளை நன்றி உணர்வோடு நினைவு கூறவும், தொடங்கவிருக்கும் புதிய மாதத்தை நமக்கு நன்மைகளால் நிரப்பவும் அவரிடம் நம்மையே ஒப்புக்கொடுப்போம். இன்றைய முதல் வாசகத்தின் ஆசிரியர் சூரியனுக்குக்கீழ் மனிதன் செய்கின்ற செயல்கள் அனைத்துமே வீண், யாதொரு பயனுமில்லை என்கிறார். இரண்டாம் வாசகத்தில் கீழ் உள்ளவற்றை நாடாதீர்கள், மேலுள்ளவற்றை நாடுங்கள் ஏனெனில் அங்கே தான் இறைவனின் வலப்புறத்தில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து அரியணையில் உள்ளார் என்று தூய பவுல் குறிப்பிடுகிறார்.

நற்செய்தியில் ஆண்டவர் ஒருவனுக்கு எவ்வளவுதான் செல்வம் இருந்தாலும், அதனால் அவனுக்கு வாழ்வு வந்துவிடாது. எவ்வளவோ உழைத்து சேர்த்திருந்தாலும் அன்றே அவன் இறந்துபோனால் அவனுக்கு ஒரு பயனும் இல்லை. உழைக்காத ஒருவன் அதை அனுபவிக்கிறான் என்ற கருத்துக்களை முன்வைக்கிறார். எனவே ஒரு பயனும் இல்லாமல் அழிவுறும் கீழ் உள்ளவற்றை நாடாமல், நமக்கு அழியா வாழ்வு தரும் ஆவிக்குறிய மேன்மையானவற்றை நாடி மகிழ்ந்து பகிர்ந்து வாழ தேவையான மனநிலையும் ஞானத்தையும் பெற்று நிலைவாழ்வின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ள இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருச்சபைக்காக: முடிவில்லா தந்தையே, எமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் மேலும் துறவறத்தார் அனைவரையும் திருச்சபையின் கிறிஸ்தவர்களின்

எதிரிகளிடமிருந்து உயிரையும், ஆன்மாவையும் பாதுகாத்து வெளிமாநிலங்களில் ஆபத்தின்றியும், அச்சமின்றியும் இறைப்பணி செய்ய இறைவன்தாமே எல்லா நிலைகளிலும் இவர்களுடன் இருந்து ஆன்ம சரீர நலன்களை நல்கி ஆசீரளித்திட உம்மை மன்றாடுகிறோம்.

2. பங்கு மக்களுக்காக: இரக்கமுள்ள இறைவா, எம் பங்கிலுள்ள மக்கள் யாவரும் தொடர்ந்து விசுவாச வாழ்வில் பயணிக்கவும், அழிந்துப்போக கூடியவற்றை நாடாமல் நிலைவாழ்வு தரும் ஆவிக்குரியவற்றை நாடவும், எண்ணற்ற கஷ்டங்கள், வறுமை, கடன் பிரச்சனைகள், பற்றாக்குறை இவைகளை நீக்கி, தாங்கள் செய்யும் வேலைகளில் தொழில்களில் முன்னேற்றம் காணவும், பிள்ளைகளின் கல்விக்காக கடன்வாங்கியுள்ள குடும்பங்களையும், பெற்றோர்களையும் நீர் பாதுகாத்து ஆசீர்வதிக்கவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நாட்டு தலைவர்களுக்காக: வழிநடத்தும் இறைவா, நாட்டையாளும் ஆட்சியாளர்கள் தாங்கள் மீண்டும் வெற்றி பெற்றோம் என்ற தலைகணத்தை மறந்து, நன்றியுள்ளம் கொண்டவர்களாய் விளங்கி மக்களின்மேல் சுமைகளை வைக்காமல் நேர்மையாய் ஆட்சி செய்யவும், கடைநிலை மக்களையும் வறுமையில் உழல்பவர்களையும் நினைவில் கொண்டு செயல்படவும் புதிய தொழில்கள் வேலை வாய்ப்புகளை உருவாக்கி தரவும் முற்படவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. இளையோருக்காக: வழிகாட்டியாம் எம் இறைவா, இளைஞர்கள் இளம் பெண்கள் இறை நம்பிக்கையிலும், விசுவாசத்திலும், கல்வியிலும் சிறந்து விளங்கவும், பல தியாகங்களை செய்து படிக்க வைக்கும் பெற்றோர்களின் கனவை மெய்ப்பிக்கவும், இன்றைய இளைஞர்கள் நாளைய தேசத்தின் தூண்கள் என்பதை உணர்ந்து திருச்சபைக்கும் சமுதாயத்திற்கும் தங்களின் பங்களிப்பை நல்கிடவும் இவர்கள் கற்கும் துறையில் சிறந்து விளங்கி நல்ல எதிர்காலம் அமைய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி - 2: விசுவாசத்தில் வளர...
## முதியோருக்கு மதிப்பும் அன்பும் (சுவக்கீன் அன்னம்மாள் விழா)

திரு. P. விக்டர்

இம்மாதம் 26ம் நாள் நாம் புனித சுவக்கின் அன்னாள் திருவிழாவினை சிறப்பிக்கின்றோம். யார் இவர்கள்? இவர்கள்தான் நமது அன்னை மரியாளின் பெற்றோர். திருமணமாகி பல ஆண்டுகள் குழந்தை பாக்கியம் இல்லாதிருந்த நிலையில் கடவுள் தங்களுக்குக்

குழந்தையைத் தருவாரென்றால் அக்குழந்தையை இறைவனுக்கே அர்ப்பணிப்பதாக கடவுளுக்கு வாக்கு தந்தனர், மரியாள் பிறந்தார் தாங்கள் ஒப்புக்கொடுத்தபடியே மகள் மரியாளை கடவுளுக்கு காணிக்கையாக ஒப்புக்கொடுத்தனர். மகளுக்கு இறைவார்த்தையைப் பற்றியும், பரிசுத்தமான வாழ்வு வாழ்வது பற்றியும், கடவுளின் அன்பு பற்றியும், இறைப்பணி பற்றியும் எடுத்துரைத்து அவரை சிறந்த பக்தி சீடராக உருவாக்கினர். இதன் நிமித்தமாகவே கடவுள் மரியாளை தனது மகன் இயேசுவுக்குத் தாயாக ஏற்படுத்தினார்.

புனித சுவக்கின் அன்னாளை முதியோரின் பாதுகாவலர்களாக திருச்சபை நியமித்து அவர்களை கௌரவப்படுத்தியுள்ளது. இவர்களது திருவிழாவைக் கொண்டாடும் நாம் நம் வீட்டு முதியவர்களை எவ்வாறு நடத்துகிறோம், அவர்களை அன்புடனும் மதிப்புடனும் பராமரிக்கின்றோமா? முதியோர்களின் ஆலோசனை அரசர்களையும் நல்வழிப்படுத்தும் என்று விவிலியம் கூறுகிறது. (1அர 12:6) முதியோருக்கு ஞானமும் அறிவும் உண்டு (யோபு12:12) என்றும் கூறுகிறது. முதியோருக்கு ஆற்றல் குறைவு ஏற்படுவது உண்டு ஆனால் அறிவு குறைவு ஏற்படுவதில்லை.

**யார் இந்த முதியவர்கள்?**

ஒருசில ஆண்டுகளுக்கு முன்புவரை நமது குடும்பத்தில் முக்கியமான நபராயிருந்து பிள்ளைகளை நன்கு படிக்க வைத்து அதற்காக பல தியாகங்களையும் செய்து பல்வேறு இழப்புக்களைச் சந்தித்து குடும்பத்தை உயர்த்தியவர்கள்தான் இந்த முதியவர்கள். நான் சிறுவனாய் இருந்தபோது 1965, 1966 ஆண்டுகளில் கடும் அரிசி பஞ்சம் நிலவியது. தந்தைக்கோ வருமானம் ஏதுமில்லை. பிள்ளைகள் ஆறுபேர். மரவள்ளிக்கிழங்குதான் பல குடும்பங்களில் மதிய உணவு. எங்கள் வீட்டிலும் அதுவே உணவு. அந்நிலையில் எனக்கு வயது 11. என்னை அருகிலுள்ள ஓட்டலில் சர்வர் வேலைக்கு அனுப்ப அருகிலுள்ள பலரும் என் தந்தைக்கு ஆலோசனை வழங்கினர். ஆனால் என் தந்தையோ நான் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் என் மகனை படிக்க வைப்பேன், வேலைக்கு அனுப்ப மாட்டேன் என்று கூறி என்னை படிக்க வைத்து மத்திய அரசு வேலையும் கிடைக்க வழி செய்தார். இந்த தகப்பன் எனக்குப் பாரமா, இவரை நான் ஒதுக்கலாமா? இதுதான் இன்றுள்ள ஒவ்வொரு குடும்பத்தின் நிலையும்.

**இன்றைய நிலை**

இன்றைக்கு நமது முதியோர் எவ்வளவாக மதிக்கப்படுகின்றனர்? பதிலும் கேள்விக்குறிதான். புல முதியோர் இல்லங்கள் நிரம்பி வழிகின்றன. பார்த்துக் கொள்ள யாருமே இல்லை என்று இருப்பவர்களைவிட பார்த்துக்கொள்ள மனமில்லாது கொண்டுவந்து விடப்படுகிறவர்களே அதிகம். எனது நண்பர் ஒருவர் வெளிநாட்டில் உள்ள மகனது வீட்டிற்கு

செல்லவிருக்கின்றார். வீட்டிலிருக்கும் வயது முதிர்ந்த தனது தாயாரை தன்னுடைய உடன்பிறந்தவர்கள் பத்து பேரிடமும் தான் திரும்பி வரும்வரை தாயாரை வைத்து பராமரிக்க வேண்டுகிறார். ஆனால் ஒருவரும் உடன்படாத நிலையில் பதினோருபேரைப் பெற்ற அந்த தாய் முதியோர் இல்லத்தில் சேர்க்கப்படுகிறார். இந்த பிள்ளைகளை வளர்த்து உருவாக்கிட இந்த தாய் எவ்வளவு பாடுபட்டிருப்பார்கள், தியாகம் செய்திருப்பார் சிந்திப்போம்.

முதியோர்கள் நம்முடைய வீடுகளில் தேவையில்லாதவராய் மாறிப்போனார்கள், சுமைகளாக காணப்படுகிறார்கள், எதற்கும் உபயோகமில்லாதவர்களாய், கருதப்படுகிறார்கள். அதனாலேயே எளிதில் உதாசீனப்படுத்தி விடுகின்றோம். பேச்சுத் துணைக்குக்கூட யாருமே இல்லாத சூழலில் சில வீடுகளில் முதியவர்கள் தனிமையில் இருப்பதைப் பார்க்கும்பொழுது மனம் கலங்கித்தான் போகிறது. ஆயிரம் இருந்தும் வசதிகள் இருந்தும் "ழே ீநயஉந ழகை ஆைெ" என்பது இவர்களது வாழ்வின் அன்றாட சோகமாக நிற்கிறது.

### அன்பும் மதிப்பும் அளிக்க என்ன செய்யலாம்?

நமது வீட்டில் உள்ள சிறு பிள்ளைகளுக்கு தங்களுடைய தாத்தா, பாட்டி பற்றிய நன்மையான செயல்களைச் சொல்லி பிள்ளைகளிடத்தில் அவர்களைக் குறித்த நல்ல எண்ணங்களை உருவாக்க வேண்டும். வெளியில் செல்லும்பொழுதெல்லாம் அவர்களிடம் "ஆசீர்" வாங்கிச் செல்ல அறிவுறுத்த வேண்டும். அவர்களது தியாகங்களையும் நமக்காக அவர்கள் அனுபவித்த துன்பங்களையும், எடுத்துக்கூற வேண்டும். அவ்வாறு பிள்ளைகள் அறியும்போது பெரியவர்களைக் குறித்து அவர்கள் உயர்வாகக் கருதுவார்கள். அது அவசியமும் கூட. திருவிவிலியத்தில் உள்ள எந்த தாத்தா, பாட்டியும் ஒதுக்கப்பட்டதாகவோ, வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்டதாகவோ சொல்லப்படவேயில்லை. அவர்களது வயது முதிர்ந்த நிலையில் தனது பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் ஆசீர்வதித்தார்கள் என்றுதான் எழுதப்பட்டுள்ளது. அவர்கள் தங்கள் இறுதி காலம் வரைக்கும் வாழ்ந்தார்கள் என்றுதான் திருவிவிலியம் பறைசாற்றுகிறது.

நமது கத்தோலிக்க ஆலயங்களில் முதியோர்க்கென இயக்கங்களை உருவாக்க வேண்டும். வாரத்திற்கு ஒருமுறையாகிலும் அவர்களோடு நமது நேரத்தை செலவிடவும், பேசி மகிழவும் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். நமது பங்குகளில் குழந்தைகளுக்கு பாலர் சபை உள்ளது, வாலிபர்களுக்கு இயக்கம் உள்ளது, பெண்களுக்கு அமைப்புகள் உள்ளன. ஆனால் முதியோருக்கென்று இதுவரை எந்த அமைப்பும் உருவாக்கப்படவில்லை. அவர்களை அடிக்கடி கூடிவரச்செய்து அவர்களுக்குள் ஒரு நல்ல உறவை உருவாக்குவது அவசியம். அவர்களுக்குள் ஒரு புது வாழ்வை உருவாக்குவது இன்றைய தேவையாகும். வீடுகளில் முடங்கிக்கிடக்கும்

முதியோரை சந்தித்து ஆறுதல் கூறவும், சந்தோஷப்படுத்தவும் இந்த அமைப்பினர் முயற்சி செய்யலாம். அப்படி செய்யும்போது இதுவரை தனிமை வேதனையை அனுபவித்தவர்கள் அவற்றிலிருந்து வெளிவந்து மகிழ்வர்.

திருச்சபை என்பது வெறும் ஆராதனை கூடமல்ல, அல்லது நான்கு சுவர்களைக் கொண்ட கட்டிடமல்ல. வழிபாட்டுக்காக மட்டும் பயன்படும் இடமல்ல, பல்வேறுப்பட்ட மக்களை உருவாக்கும் ஒரு தொழிற்கூடம்போல இது இயங்க வேண்டும். இங்கிருந்து நல்ல இளைஞர்கள் உருவாக வேண்டும், நல்ல குடும்பங்கள், பண்புள்ள இளம் சிறார்கள், சிந்தனையாளர்கள், விளையாட்டு வீரர்கள், பாடகர்கள், பேச்சாளர்கள், சகோதர உறவு, நல்ல சமுதாயம் இவையெல்லாம் இருந்தால் நல்ல மகிழ்ச்சியான முதியோரும் காணப்படுவர். இவைகளையெல்லாம் செய்யும்போதுதான் திருச்சபை தனது முழுமையை அடைகிறது.

**முடிவுரை**

நமது முதியோருக்கு அன்பும் மரியாதையும் காட்டும்பொழுதுதான் நமது பண்பு உயர்ந்து நிற்கிறது. தனி வாழ்விலும், பொதுவாழ்விலும் திருச்சபையோடு இணைந்து நமது முதியவர்களுக்கு நமது அன்பையும் மரியாதையையும் காட்டுவோம். மகிழ்ச்சி என்பது பிறரை மகிழ்ச்சிப்படுத்திப் பார்ப்பதில்தான் இருக்கிறது. "சின்னஞ்சிறிய என் சகோதரர்களுக்குச் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத் 25:44) என்கிற இயேசுவின் வார்த்தைகளை நினைவு கூறுவோம். அதன்படி வாழ முயல்வோம். முடிந்தவரை முதியவர்களை மகிழச் செய்வோம்.

## அல்போன்சம்மாள் தரும் வாழ்வின் பாடங்கள்

திரு. ஜான் அலெக்ஸ்

"இயேசுவின் துன்பத்தில் தம் துன்பத்தை ஒப்புக்கொடுப்போர் கலக்கமுறத் தேவையில்லை"

ஜோசப் முட்டத்து பாடத்து மற்றும் மரியம்மா ஆகியோரின் அன்பு மகளாக கேரளாவில் கோட்டயத்திற்கு அருகில் குடமாளூர் என்ற ஊரில் பிறந்தவர் அல்போன்சா. 1910 ஆகஸ்ட் 19ம் நாள் பிறந்த இவருக்கு அதே மாதம் 26ம் நாள் அன்னா என்று பெயரிட்டார்கள். பிறந்து சில வாரங்களிலே தாயார் இறந்ததால் பெரியம்மாவின் வளர்ப்பில் வளர்ந்தார்.



ஆர்ப்புக்கரையில் தொண்ணான்குழி அரசு துவக்கப்பள்ளியில் ஆரம்ப கல்வி பெற்றார். 1917ம் ஆண்டு நவம்பர் 27ல் முதல் நற்கருணை பெற்று இயேசுவை உள்ளத்தில் குடிவைத்தார். 1925ம் ஆண்டு ஜனவரி 21ல் உறுதிபூசுதல் பெற்ற பிறகு தமது இதயத்தை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்தார். ஒவ்வொரு சனிக்கிழமையும் அன்னை மரியாவிடம் சிறப்பாக மன்றாடினார்.




தன்னையே இறைவனுக்குக் கையளிக்க முடிவு செய்திருந்த அல்போன்சாவிற்கு திருமண ஏற்பாடுகள் செய்யப்பட்டது. மறுத்துப் பார்த்தார் முடியவில்லை. தன் அழகுதானே இதற்கு காரணம் என்று உமி எரிந்து கொண்டிருந்த குழியின்மீது அமர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார். தடுமாறி உள்ளே விழுந்து அலறி அடித்து வெளியேறினார். கால் இரண்டும் வெந்து போக, 90 நாட்களுக்கு பிறகு சிறிது சிறிதாக குணமாகினார். அருட்தந்தை சாக்கோ அவர்களை சந்தித்து தமது அழைத்தலை குறித்து அவரிடம் பேசினார். பிறகு பிரான்சிஸ்கன் கிளாரம்மாள் சபையில் அல்போன்சா சேர்த்துக் கொள்ளப்பட்டார். 1928ல் துறவறத்தில் நுழைந்தார். 1930 மே 19ல் துறவற ஆடை பெற்றார். 1933 முதல் அதிகமாக நோய்வாய்ப்பட ஆரம்பித்தார். நவதுறவியாக இருந்தபோது முன்பிருந்த ரத்தப்போக்கு மீண்டும் ஆரம்பித்தது. வாய், மூக்கு வழியாகவும் ரத்தம் கசிந்தது. இறக்கும் நிலையில் துன்புற்ற இவர் அருளாளர் சாவுரா குரியக்கோஸ் எலியாஸிடம் மன்றாடினார். ஒரு நாள் இரவு தனக்கு குரியாக்கோஸ் காட்சியளித்து அவரை தொட்டு ஆசீர்வதித்தார். ரத்தப்போக்கு முழுமையாக நின்றது.

அல்போன்சா 1936ம் ஆண்டு ஆகஸ்ட் 12ல் நித்திய வார்த்தைப்பாடு கொடுத்தபின் கொடிய காய்ச்சல் அவரை வாட்டியது. இவரை கவனித்துக் கொண்ட பெண்மணி வேண்டா வெறுப்போடு பணியாற்றினார். சூடான காபியை காலில் ஊற்றிவிட்டார். யாரிடமும் அவரைப்பற்றி குறை கூறாமல் அல்போன்சா பொறுமையோடு இருந்தார். 50 நாட்களுக்கும் மேலாக காய்ச்சல் இருந்ததால் தனியாக வைக்க எல்லாரும் தலைமையிடம் பரிந்துரைத்தார்கள். அல்போன்சா, "இயேசுவின் குழந்தைத் தெரெசாவிடம் நவநாள் இருக்கிறேன். இன்றிலிருந்து ஒன்பதாம் நாளுக்குள் சரியாகாவிட்டால் அப்படியே செய்யுங்கள்" என்றார். ஒன்பதாம் நாள் குணம் பெற்றார். எப்படி என்று கேட்டபோது, தன்னை ஒரு கார்மல் சகோதரி தொட்டதாகவும் அதை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டாராம். மீண்டும் இரட்டை நிமோனியா தாக்கியது. அத்தனை துயரத்திற்கு மத்தியிலும், "ஆண்டவரே இரத்தம் படிந்த உம் கையால் என்னைக்

கழுவும். குத்தப்பட்ட உம்முடைய இதயத்தில் என்னையும் சேர்த்துக் கொள்ளும்" என்று செபித்தார். காலில் மறைவான இடத்தில் கட்டி வந்து எழ முடியாதபோது, "ஆண்டவரை போல நானும் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிறேன். அவரால் கை கால்களை அசைக்க முடியவில்லை. நானும் அப்படியே" என்றார். "சிலுவைகள் அதிகமாக கிடைக்க நான் செபிக்க போகின்றேன் நீங்கள் அனுமதி தரவேண்டும்" என்று அருட்தந்தை ரோமுளூஸ் என்பவரிடம் கூறினார்.

1945ம் ஆண்டு ஜூலை மாதத்தில் இடைவிடா வாந்தி எடுத்தார். "ஆண்டவர் தரும் இந்தக் கிண்ணத்தைக் கடைசித்துளி வரை நான் பருக வேண்டும்" என்று முணுமுணுத்தார். "பாடுகளைக் குறித்து நினைப்பதற்கே எனக்கு பயமாகவும் பிறருக்கு கஷ்டமாகவும் இருக்கிறது. ஆனால் துன்பங்களுக்குப் பிறகு நான் அனுபவிக்கும் ஆனந்தத்தை நினைக்கும்போது இத்துன்பங்கள் அடிக்கடி வர நான் விரும்புகிறேன். எப்படிப்பட்ட ஆனந்தம் என்றால், இயேசு என் அருகில் வந்து ஆறுதல் கூறுவது போலவும் அவருடைய திருஇருதயத்திலிருந்து அன்பின் இனிமை பொழிவது போலவும் நான் உணர்கிறேன்" என்றார்.



இயேசுவின் துன்பத்தை விரும்பி ஏற்று ஆனந்தித்த அல்போன்சா 1946ம் ஆண்டு ஜூலை 28ம் நாள் மறைந்தார். திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் 1986ம் ஆண்டு பிப்ரவரி 8ல் இவருக்கு அருளாளர் பட்டம் வழங்கினார். திருந்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் 2008ம் ஆண்டு அக்டோபர் 12ம் நாள் புனிதர் நிலைக்கு உயர்த்தினார். "இயேசுவின் துன்பத்தில் தம் துன்பத்தை ஒப்புக் கொடுப்போர் கலக்கமுறத் தேவையில்லை" என்ற ஆழமான பாடத்தை நமக்கு தன் வாழ்வின் மூலம் உணர்த்தியவர் நமது நாட்டின் முதல் பெண் புனிதை அல்போன்சா அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

## கார்மேல் அன்னை வரலாற்று குறிப்பு

திரு. ஜான் சுரேஷ்

கார்மேல் என்பதற்கு எபிரேய மொழியில் "அழகிய தோட்டம்" என்பது பெயர். இந்தக் கார்மேல் மலை பாலஸ்தீன நாட்டில் ஹை/பா வளை-குடாவில் கடல் மட்டத்திலிருந்து 1800 அடி உயரத்தில் அமைந்திருக்கிறது. இம்மலையில் வாதி-என்-சிய்யா என்ற இடத்தில் துறவிகள் சிலர் சேர்ந்து அன்னைக்கு சிற்றாலயம் ஒன்று எழுப்பி வணங்கி வந்தார்கள். இந்த மலையில்தான் முன்பு போலி இறைவாக்கினருக்கு எதிராகச்

சதிராடி உண்மை இறைவனை எலியா இறைவாக்கினர் மக்களுக்கு எடுத்துரைத்தார்.

சிலுவைப்போர் 11-ம் நூற்றாண்டில் நடந்தபோது புனித பூமிக்கு சென்ற சில துறவிகள் எலியாவைப் பின்பற்றி வாழ விரும்பி இதே மலைக்கு சென்றார்கள். இவர்கள் "கார்மேல் மலை தூய துறவிகள்" என்று அழைக்கப்படுகிறார்கள். கார்மேல் சபையின் தலைமை தந்தையாக இருந்த புனித சைமன் ஸ்டோக் என்பவருக்கு அன்னை மரியா 1251ம் ஆண்டு ஜூலை16ம் தேதி காட்சி கொடுத்தார். அக்காட்சியில் சைமன-டம் உத்திரியம் ஒன்றைக் கொடுத்த கன்னி மரியா, "இது கார்மேல் துறவிகளுக்கு வழங்கப்படும் தனிச்சலுகை, பக்தியோடு அணிபவர்கள் இம்மையிலும் மறுமையிலும் எவ்வித துன்பத்திலும் நரக நெருப்பிலும் அல்லலுற மாட்டார்கள்" என்றார். அன்னை காட்சி கொடுத்த அந்த நாளே கார்மேல் மலை புனித கன்னி மரியின் விழாவுக்கான நாளாக குறிக்கப்படுகிறது.

இந்த விழாவை முதலில் திருத்தந்தை 5ம் சிக்ஸ்துஸ் 1587ம் ஆண்டு அங்கீகரித்தார். ஆரம்பத்தில் இந்த விழா இத்தாலியின் தென் பகுதிய-ில் உள்ள மறைமாவட்டங்களில் கொண்டாடப்பட்டது. 1682ல் கார்மேல் ஆலங்களில் மட்டும் கொண்டாட அனுமதிக்கப்பட்டது. திருத்தந்தை 13ம் ஆசீர்வாதப்பர் லத்தீன் திருச்சபை முழுமைக்கும் கார்மேல் மலை புனித கன்னிமரியின் விழாவைக் கொண்டாட 1726, செப்டம்பர் 24 அன்று வழிவகுத்தார். கார்மேல் அன்னைக்கு, சென்னையிலிருந்து மாமல்லபுரம் செல்லும் நுஊசு ரோட்டில் கோவளம் என்ற மீனவர் வாழும் கிராமத்தில் கார்மேல் அன்னையின் தேவாலயம் ஒன்று அமையப்பெற்றுள்ளது. வருடாந்தோறும் ஜீலை மாதம் கொடியேற்றத்துடன் திருத்தேர் பவனி சிறப்பு திருப்பலி என கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. அன்னை கன்னிமரியின் அன்புக்கரம் பற்றி அவரை வழிதுணையாகக் கொள்வோர் நலமோடு வாழ்வர்.

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

1. இரக்கமுள்ள கடவுளைச் சந்திப்பதன் அடையாளங்கள் மற்றும் கருவிகளாக இருங்கள், இரக்கச் செயல்களை நடைமுறைப்படுத்துங்கள், இரக்கத்தின் கலாச்சாரத்தை உருவாக்குங்கள் என்று உரோம் தூய பவுல் பசிலிக்காவில் கூடியிருந்த ஆறாயிரத்திற்கு மேற்பட்ட அருள்பணியாளர்களிடம் கேட்டுக் கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ். ஏழைகள்மீது அக்கறை,

ஒப்புரவு அருளடையாளத்தில் இரக்கப் பண்பை வெளிப்படுத்தல், இறைமக்களின் விசுவாச உணர்வோடு ஒன்றித்து, இரக்கத்தின் கலாச்சாரத்தை உருவாக்குதல் ஆகியவைப்பற்றி எடுத்துரைத்தார் திருத்தந்தை. முதலில், புனிதர்களில் பலர், பெரும் பாவிகளாக இருந்தனர் என்றும், அதுவே அவர்களை இரக்கத்தை அதிகமாகச் செயல்படுத்துபவர்களாக மாற்றியது என்றும் உரைத்த திருத்தந்தை, கடவுள் தொடர்ந்து மன்னித்துக்கொண்டே இருக்கிறார் என்றும் கூறினார். நம் வாழ்வு குறுகியது, இதில் ஏராளமான நல்ல காரியங்கள் செய்ய வேண்டியிருக்கின்றது, எனவே காலத்தை வீணாக்காமல் கழுவாய் தேட வேண்டுமென்றும் கடவுளின் பெயர் இரக்கம் என்றும் கூறினார் திருத்தந்தை.

2. பாலியல் புகார் விவகாரத்தைக் கையாள்வதில் ஆயரின் நடவடிக்கைகள் அல்லது புறக்கணிப்புகள், தனிநபர்கள் அல்லது சமூகங்களுக்கு, உடல், நன்னெறி, ஆன்மீக அல்லது நிதிசார்ந்த கடும் விளைவை ஏற்படுத்தினால், அந்த ஆயர், நிர்வாகப் பொறுப்பிலிருந்து நீக்கப்படலாம் என்றும், திருத்தந்தையின் (ஆழுவுரு ீசுழீசுஐழு) அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கடுமையான காரணங்களுக்காக, ஓர் ஆயர் பணிநீக்கம் செய்யப்படுவதை அனுமதிக்கும் திருஅவை சட்டம் ஏற்கனவே உள்ளது எனினும், கவனமின்றி குறிப்பாக, பாலியல் குற்ற விவகாரத்தைக் கையாள்வதில் அக்கறையின்றி இருப்பது பதவியிழப்புக்கு இட்டுச்செல்லும் என்பதைத்தான் தெளிவாகக் குறிப்பிட விரும்புவதாகத் தெரிவித்துள்ளார் திருத்தந்தை. தங்களின் மந்தையில் மிகவும் பலவீனர்களாக இருப்பவர்கள்மீது மிகுந்த அக்கறையுடன் செயல்படுமாறு திருத்தந்தை ஆயர்களைக் கேட்டுள்ளார்.

3. புதுடெல்லியில், கடந்த திங்களன்று நடைபெற்ற விழா ஒன்றில், 72 தலித் கிறிஸ்தவர்க்கு விருதுகள் வழங்கி அவர்களை ஊக்குவித்து உரையாற்றிய கர்தினால் கிளீமிஸ் அவர்கள், பொருளாதார, சமூக மற்றும் சமயத் துறைகளில், தலித் மக்களுக்குப் போதுமான அளவில் உதவிகள்

செய்யப்படவில்லை என்று தெரிவித்தார். இவ்விழாவில் தலித் கிறிஸ்தவர்களின் முன்னேற்றத்திற்காக உழைத்த 72 தலித் கிறிஸ்தவர்க்கு ஒரு சான்றிதழும், ஒரு நினைவுச்சின்னமும் வழங்கப்பட்டன. இவ்விருது பெற்றவரில் ஒருவரான 30 வயது நிரம்பிய ஜூலியஸ், ஆங்கிலம், கணிதம் மற்றும் பிற திறமைகளை வளர்த்துக்கொள்ளும் விதத்தில் தலித் சிறார்க்குப் பயிற்சிகள் வழங்கியவர், இவர் தமிழகத்தைச் சேர்ந்தவர்.

4. சீரோ மலபார் வழிபாட்டுமுறை திருஅவையில் முதல் முறையாக, திருமணமான ஒருவரை நிரந்தரத் தியாக்கோனாக அங்கீகரித்துள்ளார் திருஅவைத் தலைவர் கர்தினால் ஜார்ஜ் அலஞ்சேரி. நான்கு குழந்தைகளுக்குத் தந்தையாகிய ஜாய்ஸ் ஜேம்ஸ் என்பவர், இந்தியாவிலும், இலண்டனிலும் ஐந்து ஆண்டுகள் குருத்துவப் படிப்பை முடித்துள்ளார். இவர், உஜ்ஜய்ன் சீரோ மலபார் திருஅவையில் பணியாற்றுவார். சீரோ மலபார் திருஅவையில், இதற்கு முன்னதாக, பொதுநிலையினர் நிரந்தரத் தியாக்கோன்களாக அங்கீகாரம் பெற்றிருந்த போதிலும், இத்திருஅவை, தனிப்பட்ட திருஅவையாக மாறிய பின்னர், திருமணமான ஒருவர் நிரந்தரத் தியாக்கோனாக மாறியிருப்பது இதுவே முதல்முறை எனக் கூறப்படுகின்றது. இதனை ஒரு வரலாற்று நிகழ்வாகவும் ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

5. தாங்கமுடியாத அல்லது தீராத நோயினால் துன்பங்களை அனுபவித்துவரும் நோயாளிகளுக்கு கருணைக் கொலையை அனுமதிக்கும் புதிய சட்ட பரிந்துரை குறித்து ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது கானடா ஆயர் பேரவை. தங்கள் மனச்சான்றிற்கு இயைந்த வகையில் கருணைக் கொலையை நிறைவேற்ற மறுக்கும் கத்தோலிக்க மருத்துவர்களும், தாதியர்களும், இப்புதிய சட்டத் திருத்தத்தால் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக கூறும், கானடா ஆயர் பேரவைத்தலைவர், ஹெமில்டன் ஆயர் னுழுருபுடுயுளு ஊசுழுளுடீலுஇ மருத்துவப் பணியாளர்களின் மனச்சான்று நடவடிக்கைகளுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லையெனில் கத்தோலிக்க மருத்துவ மனைகள் மூடப்படும் அபாயம் உருவாகும் என்று எச்சரித்துள்ளார்.

## சுடர் வாசகர் போட்டி 24 - முடிவுகள்

1. அறியாமை, இயலாமை, கல்லாமை
2. இறைவனால்
3. ஜூன் மாதம்
4. தூய பேதுரு
5. தூய ஆவியின் அடையாளமே
6. தூய அலோஸியஸ் கொன்சாகா
7. மத்தேயு 18:33
8. அந்தியோக்கியா மக்கள்
9. தந்தை மார்தின் திபியோன், தாய் தேவரா தெரேசா
10. திருத்தந்தை 2ம் ஜான்பால், 1999
11. வழக்கறிஞர்
12. தூய பதுவை அந்தோனியார்
13. இயேசு திருமுழுக்கு யோவானிடம் கூறியது
14. வழக்கறிஞர், தேசியவாதிகளுக்கு பாதுகாவலர்
15. லிஸ்பான்

## சரியான விடையெழுதி பரிசு பெறும் வெற்றியாளர்கள்

Sr. Stella Puthota Bethl, Muttukadu, Kanchepuram.
Sr.Mary Gladys, Little Mount, Chennai.
C. Pauline Susainathan, Madurantakam.

## சுடர் வாசகர் போட்டி - 25

1. இறை இரக்கத்தை நாம் முதலில் சுவைக்கும் இடமாக ஆசிரியர் எதைக் குறிப்பிடுகின்றார்?
2. சூலை 3ஆம் நாள் கொண்டாடும் திருவிழா என்ன?
3. ”நற்செயல்கள் நல்ல வார்த்தைகளைவிட சிறந்தவை, மேலானவை” கூறியது யார்?
4. அருளாளர் ஆன்மரி ஜவுகே தன் பெற்றோருக்கு எத்தனையாவது குழந்தை?
5. தூய அல்போன்சம்மாவுக்கு முத்திபேரு பட்டம் எங்கே, எப்பொழுது, யாரால் வழங்கப்பட்டது?
6. உத்திரியம் அணிவோர் அடையும் பயன் என்ன?
7. ”இயேசுவின் துன்பத்தில் தம் துன்பத்தை ஒப்புக் கொடுப்போர் கலக்கமுறத் தேவையில்லை” கூறியது யார்?

8. தூய பெனடிக்டின் சகோதரி யார்?
9. தூய கார்மேல் அன்னை ஆலயம் சென்னையில் எங்கு உள்ளது?
10. செபதேயுவின் மக்கள் என்று திருவிவிலியம் யாரைக் குறிப்பிடுகின்றது?
11. தூய பெனடிக்ட் மலை உச்சிக்கு சென்று சந்தித்த தவமுனிவர் யார்?
12. முதியோர்களின் பாதுகாவலர் என்று நமக்கு திருச்சபை யாரை கொடுத்துள்ளது?
13. தூய அல்போன்சாவுக்கு கனவில் தோன்றி அவரின் ரத்தப் போக்கு நோயை குணப்படுத்தியவர் யார்?
14. அருளாளர் ஆன்மரி ஜவுகேவின் பெற்றொர்கள் யார்?
15. தூய யாக்கோபு எழுதிய திருமுகத்தில் மொத்தம் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?

## அடுத்த சுடரில்

**பகுதி -1: வழிபாட்டு வழிகாட்டி**

வழிபாட்டு வழிகாட்டி

தூய அல்போன்ஸ் மரிய லிகோரி

தூய ஜான்மரி வியான்னி

தூய கன்னி மரியாவின் பேராலாய நேர்ந்தளிப்பு

ஆண்டவரின் தோற்றம் மாற்றம் விழா

தூய கன்னிமரியாவின் விண்ணேற்பு, இந்திய சுதந்திர தினம்

தொன் போஸ்கோ பிறந்த தினம்

புனித பெர்னார்து

அரசியான தூய கன்னி மரியா

புனித பர்த்தலமேயு

தூய மோனிக்கம்மாள்

திருமுழுக்கு யோவானின் பாடுகள்

பொதுக்கால ஞாயிறுகள்

**பகுதி - 2: விசுவாசத்தில் வளர...**

தூய மோனிக்கம்மாள் தூய அகுஸ்தினார் - தாயும் சேயும் தரும் பாடங்கள்
தொன் போஸ்கோவின் வாழ்வில் இறை இரக்கம்
தூய ஜான்மரி வியான்னி இறை இரக்கத்தின் கருவி

**தீபகச் சுடர்**

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதிப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரை பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்: ........................................
முகவரி:........................................
........................................
........................................
........................................

தொலைப்பேசி: ..................

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஜூலை 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியை குறிப்பிடவும்)